RNI No. RUC 54650 / 88 Postal Regn No. TTN-155/2012-2014
Posted at Korampallam S.O. 628 101 On 24 & 27 of every month.

# Philio 2013

கிருபையின் ஊழியங்களின்

## இளைஞர் இனிய பெருவிழா



இடம்: காய்கனி மார்க்கெட் மைதானம்,
வ.உ.சி. கல்லூரி எதிரில், தூத்துக்குடி.

நாள்: 14.02.2013 வியாழன் (Valentine's Day)

நேரம்: மாலை 4.30 முதல் 8 மணி வரை

வெற்றிச்செய்தி:

அண்ணன்

**மோகன் சி. லாசரஸ்**

வாலிபர்கள், மாணவ, மாணவிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மாணவ, மாணவியருக்கு தேர்வுக்கான வெற்றி ஆலோசனைகள்,
விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படும்.

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்

தொடர்புக்கு: 94432 89026, 94421 20257, 94435 28474, 94428 86122

To

**கிருபையின் ஊழியங்கள்**
ஆபிரகாம் நகர், பெரியநாயகபுரம்,
தூத்துக்குடி-628 101. தமிழ்நாடு.
போன்: 0461-2340768
website: www.graceministriesindia.org

**GRACE MINISTRIES**
Abraham Nagar, Perianayagapuram,
Tuticorin - 628 101. S.India.
Mobile: 94432 89026
email: graceministriesindia@gmail.com

# ஆத்தும ஆதாயகர்

ஆண்டு சந்தா ரூ. 50/–


பிப்ரவரி 2013

GRACE MINISTRIES

இயேசு கிறிஸ்து சொல்கிறார்

## நான் உங்களைச் சிநேகிதர் என்றேன்

யோவான் 15:15




Agapae-2011 on Valentine's Day

**கிருபையின் ஊழியங்கள்**
நமது மிஷனெரிப் பணி மற்றும் சுவிசேஷ பணிப்பிரிவு

**ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கம்**
நமது சிறுவர், மாணவர், வாலிபர் மற்றும் சமூகப் பணி சிறப்புப் பிரிவு

**தேவனுடைய கூடார ஊழியங்கள்**
நமது ஜெப, சுவிசேஷ எழுப்புதல் பணிப்பிரிவு

*உங்கள் சகோதரனிடமிருந்து...*

நிர்மூலமானவைகளை கட்டுகிறவரும், பாழானவைகளை பயிர்நிலமாக்குகிற வருமாகிய நம்முடைய தேவனும் நமது இரட்சகருமாகய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

இந்த பத்திரிக்கை உங்கள் கைகளில் வரும்போது Philio 2013 கூட்டங்களின் ஆயத்தத்தில் ஜெபத்துடன் செயல்பட்டு கொண்டிருப்போம். ஆனால் அன்று (பிப். 14) உலகம் வாலிபர்களை பாவப்பிடியில் சிக்க வைக்க நினைக்கும்போது நாம் அந்த வாலிபர்களை தேவனை நோக்கித் திருப்ப நமக்கு தேவன் கிருபை தருகிறபடியால் தேவனைத் துதியுங்கள்.

10 ஆயிரம் வாலிபர்களை எதிர்பார்க்கிறோம். அதன் தேவை ரூ. 3 ½ இலட்சம் சந்திக்கப்பட ஜெபியுங்கள்!

பிப். 13 முதல் லெந்து நாட்கள் ஆரம்பிக்கப்படுகிறது. பிள்ளைகள் தேர்வுக்காக ஆயத்தப்படுகிற நாட்கள் பிள்ளைகளின் கல்விக்காக அவர்கள் ஞானத்திற்காக ஜெபிக்கிறோம்!

மார்ச் மாத பத்திரிக்கையை மாணவர் சிறப்பு இதழாக வெளியிட ஆயத்தப்பட்டு ஜெபிக்கிறோம். நீங்களும் ஜெபியுங்கள்.

Philio 2013 பிப்ரவரி 14ஆம் தேதி கூட்டங்களில் நீங்களும் கலந்து கொள்ள, அநேக வாலிபர்களுக்கு சொல்லி அழைத்து வர உங்களை அன்போடு ஞாபகப்படுத்துகிறோம்!

கிருபை உங்களோடிருப்பதாக!

உங்களுக்காக ஜெபிக்கும் சகோதரன்
**பா. பொற்செல்வன் ஆசீர்**

---

**மகிமையில் பரமனோடு**

நமது மிஷனெரி சகோ. துரைராஜ் (திரளி பணித்தளம், மதுரை மாவட்டம்) அவர்கள் தாயார் திருமதி. பாலம்மாள் (வயது 70) 27.12.2012 அன்று மும்பையில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். அவர்கள் குடும்பத்தினர் ஆறுதலுக்காய் ஜெபியுங்கள்.

❄❄❄❄❄❄❄

நமது சகோதரர் பா. பொற்செல்வன் ஆசீர் அவர்கள் துணைவியார் திருமதி. பாலா ஜோசப்பின் ஆசீர் அவர்களின் தாயார் திருமதி. ஞானபாய் ரிச்சர்டு (வயது 76) 5-1-2013 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்கள். அவர்கள் குடும்பத்தினர் ஆறுதலுக்காய் ஜெபியுங்கள்.

❄❄❄❄❄❄❄

நமது கிருபையின் ஊழிய அலுவலக மேலாளர் திரு. சாமுவேல் விக்டர் (வயது 63) அவர்கள் 5-1-2013 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். அவர்கள் துணைவியார் திருமதி. மல்லிகா விக்டர் மற்றும் குடும்பத்தினர் ஆறுதலுக்காய் ஜெபியுங்கள்



## நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர் - 52
பிப்ரவரி 2013

*தொகுப்பு:* **Dr. B. வில்லியம் தர்ம ராஜா**

**எசேக்கியேல்**

2551) நரகலான விக்கிரகங்களை உன் இருதயத்தின் மேல் நாட்டாதே (14:3,4,7)
2552) நரகலான விக்கிரகங்களைப் பின்பற்றாதே (14: 5,20,23)
2553) விக்கிரகங்களுக்கு நேராக உன் கண்களை ஏறெடுக்காதே (18:6)
2554) விக்கிரகங்களைச் சேவியாதே (20:39)
2555) நரகலான விக்கிரகங்களால் உன்னைத் தீட்டுப்படுத்தாதே (20:18)
2556) நரகலான விக்கிரகங்களை உண்டுபண்ணாதே (22:3,4)
2557) கர்த்தருடைய பரிசுத்த நாமத்தை நரகலான விக்கிரகங்களால் (20:39) பரிசுத்தக் குலைச்சலாக்காதே (36:20,21,22,23)
2558) வழக்கை என் நியாயங்களின் படி தீர் (44:24) உண்மையாய்த் தீர் (18:8)
2559) உன் அப்பத்தைப் பசித்தவனுக்குப் பங்கிடு: வஸ்திரம் இல்லாதவனுக்கு வஸ்திரம் தரிப்பி (18:7)
2560) வட்டிக்குக் (Interest) கொடதே; பொலிசை(unfairInterest) வாங்காதே;(18:8 22:12)
2561) அநியாயத்துக்குத் உன் கையை விலக்கு (18:8)
2562) சிறுமையானவனுக்கு நோவுண்டாக்காதபடி உன் கையை விலக்கு (18:17)
2563) "என் கட்டளைகளின் படி செய் (36:27)அவைகளால் பிழைப்பாய் (20:11,12)
2564) உன் பிள்ளைகளைத் தீக்கடக்கப்பண்ணாதே (20:21,23:37)
2565) அபாண்டம் (lies) பேசாதே (22:9)
2566) முறைகேடு (sexual sins) செய்யாதே (22:9 ; 23:48)
2567) பரிதானம் வாங்காதே (22:12)
2568) பொருளாசையினால் உன் அயலானுக்கு இடுக்கண் செய்யாதே (22:12)
2569) அநியாயமாய்ச் சம்பாதியாதே (22:13)
2570) இரத்தம் சிந்தாதே (22:13)
2571) புறஜாதிகளின் கண்களுக்கு முன்பாகப் பரிசுத்தக் குலைச்சலாயிராதே (22:16)
2572) வழிதப்பிப் போகாதே (44:10)
2573) என்னை விட்டுத் தூரமாகாதே (44:10)
2574) மனந்திரும்பு; உன்னுடைய எல்லா மீறுதல்களையும் விட்டுத்திரும்பு (18:30)
2575) இடுக்கண் செய்யாதே(22:29)
2576) கொள்ளையடிக்காதே (22:29)
2577) சிறுமையும் எளிமையுமானவனை ஒடுக்காதே (22:29)
2578) அந்நியனை அநியாயமாய்த் துன்பப்படுத்தாதே (22:29)
2579) கர்த்தர் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவும் தக்கதானவனா(ளா)யிரு (22:30)

2580) “நீ என்னை மறந்து என்னை உனக்குப் புறம்பே தள்ளிவிடாதே” (23:35)

2581) கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தாதே (23:38)

2582) கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தைத் பரிசுத்தக் குலைச்சலாக்காதே (23:39 25:3)

2583) நான் கர்த்தராகிய ஆண்டவர் என்று அறிந்துகொள் (23:48)

2584) உன் வழிகளில் குறையற்றிருப்பதாக (28:15)

2585) உன் வியாபாரத்தை அநீதமாக்காதே (28:18)

2586) நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கத்தில் இராதபடி எச்சரி (33:8)

2587) துன்மார்க்கனே!உன் வழியை விட்டுத் திரும்பு(33:11) உன் அக்கிரமத்தை விட்டுத்திரும்பி நியாயமும் நீதியும் செய் (33:19)

2588) உன் பொல்லாத வழிகளை விட்டுத்திரும்பு நீ ஏன் சாகவேண்டும் (33)

2589) நீதிமானே! நீ துரோகம் பண்ணுகிற நாளிலே உன்னுடைய நீதி உன்னைத் தப்புவிப்பதில்லை (33:12)

2590) உன் பாவத்தை விட்டுத் திரும்பு (33:14)

2591) நியாயமும் நீதியும் செய் (33:14) பிழைக்கவே பிழைப்பாய் (33:16)

2592) நீ வாங்கின அடைமானத்தையும் கொள்ளையிட்ட பொருளையும் திரும்பக் கொடுத்து விடு (33:15)

2593) அநியாயம் செய்யாதபடி ஜீவப்பிரமாணங்களில் நட (33:15)

2594) உன் பட்டயத்தை நம்பிக் கொண்டு அருவருப்பானதைச் செய்யாதே (33:26)

2595) உன் இருதயம் பொருளாசையை பின்பற்றிப் போகாதிருப்பதாக. (33:31)

2596 என்னுடைய பண்டிகைகளிலெல்லாம் என் நியாயம் பிரமாணத்தையும் என் கட்டளைகளையும் கைக்கொள். (44:24)

2597) கர்த்தருடைய ஒய்வு நாட்களைப் பரிசுத்தமாக்கு (20:20 44:24)

2598) சுமுத்திரையான தராசும் மரக்காலும் அளவுகுடமும் உன்னிடம் இருக்கக்கடவது (45:10)

2599) நீதிமானாயிருந்து நியாயத்தையும் நீதியையும் செய் (18:5)

2600) பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும். (18:20)

● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ●

18ம் பக்க தொடர்ச்சி...

**இருதயபுரம்** : பிரின்சி என்ற சகோதரிக்கு தேவன் மனநிலை பாதிப்பிலிருந்து விடுதலை கொடுக்க ஜெபிப்போம். எஸ்தர் என்ற சகோதரிக்கு தேவன் இருதய நோயிலிருந்து சுகம் கொடுக்க ஜெபிப்போம்.

**மாதாபுரம்** : கிராம மக்கள் பாரம்பரியக்கட்டியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**குண்டவெளி** : ராஜேஸ்வரி என்ற சகோதரியின் கணவர் இறந்ததால், இக்குடும்பத்தில் உள்ளவர்களுக்கு தேவன் ஆறுதல் தரவும், சாமாதானம், கிடைக்கவும் ஜெபிப்போம்.



# அதிகாலை ஜெபமே ஜெயமே

**S. ஜெபராஜ், President Grace Ministries**

கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். ஒவ்வொரு புதிய ஆண்டிற்குள் அடியெடுத்து வைக்கும்போதும் அநேக புதிய தீர்மானங்களை எடுக்கிறோம். கிறிஸ்துவுக்குள் இன்னும் நெருங்கி வாழ, வேதத்தின் அடிப்படையில் தீர்மானங்கள் எடுக்கும் தேவபிள்ளைகளுக்கு உதவியாக கடந்த மாத ஆத்தும ஆதாயகர் இதழில் “எனது புத்தாண்டு தீர்மானங்கள்” என்ற தலைப்பில் சில ஆலோசனைகள் வழங்க தேவன் உதவி செய்தார். அந்த தீர்மானங்கள் ஒவ்வொன்றையும் தெளிவாய் அறிந்து எடுத்து தீர்மானத்தில் கர்த்தருக்குள் நிலைத்திருந்து வெற்றிவாழ்க்கை தேவன் தாமே கிருபை அருள்வாராக.

ஜெபம் என்பது ஆவிக்குரிய வாழ்க்கையின் அடித்தளம் மட்டுமல்ல நம் முழுவாழ்வின் மேன்மையான, மேலான ஆதாரம் வேதம் நம் ஜெபவாழ்விற்கு அநேக முன் உதராணங்களை நமக்குத் தருகிறது. அதிலே மோசேயின் ஜெப அனுபவம் சிறந்த ஒன்றாகும் இருக்கிறது. இயேசு நம் ஜெப வாழ்விற்கு ஒரு முழுமையான முன் மாதிரியாய் இருக்கிறார். ஜெபவாழ்வின் ஆழங்களுக்குள் அகலங்களுக்குள் உட்பிரவேசியுங்கள் தேவன் உன்னதங்களின் உயரங்களுக்குள் நம்மை அழைத்துச் செல்வார்.

இஸ்ரவேல் ஜனங்களை அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து விடுதலை செய்து பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்கு மோசே இஸ்ரவேல் ஜனங்கள் தேவனை விட்டு தூரமாய் போகிற வேளைகளிளெல்லாம், அவர்கள் தேவ கோபாக்கினைக்கு உட்படாத படி திறப்பின் வாயிலில் நின்றவர். தேவன் இஸ்ரவேல் ஜனங்களோடே பேச வேண்டிய காரியங்களையெல்லாம் மோசேயின் மூலமாகவே வெளிப்படுத்தினார். மோசே தேவனை தரிசிக்கிறவராகவும் தேவனோடு பேசுகிறவராகவும் காணப்பட்டார். அவரை அதிகாலமே எழுந்திருந்திருக்கிற மோசேயாக (யாத் 34:4) காண்கிறோம். ஆங்கில மொழி பெயர்ப்பில் இப்படி வாசிக்கிறோம். “ The Lord said to Moses, Be ready and come up in the morning” Moses rose up early in the morning as the Lord had commanded him”(Ex34:2,4) காலையில் வரும்படி தேவன் கட்டளையிட்ட போது அதிகாலையிலே தேவனை காணச் செல்லுகிறார்.

தேவனுடைய கட்டளையை நிறைவேற்றும்படி தன் புத்திரனும், ஏகசுதனும் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை பலியிடும்படி, ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக் கொண்டு தேவன் தனக்குத் குறித்த இடத்திற்குப் போனான் (ஆதி22:2,3)தன் குமாரனை பலியிட கையை நீட்டும் வேளையில் தேவதூதன் ஆபிரகாமோடே பேசினார். தேவனுக்குப் பயப்படுகிறவர் என்று சாட்சி பெறுகிறார். ஆபிரகாம் அந்த இடத்திற்கு “யேகோவாயீரே” என்று பேரிட்டார். அதினாலே கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக் கொள்ளப்படும் என்று இந்நாள் வரைக்கும் சொல்லப்பட்டு வருகிறது.(ஆதி22:12,14) அதிகாலையில் நீங்கள் தேவனுடைய சமுகத்திற்கு கடந்து செல்லும் பொழுது வானத்தையும்

பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து உங்களுக்கு ஒத்தாசை வரும். (சங்121:2) அவரே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார்.

எரிகோ இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அடைக்கப்பட்டிருந்தது, கர்த்தரின் கட்டளைப்படி யோசுவா கர்த்தரின் பெட்டியைப் பட்டணத்தை சுற்றிவரப் பண்ணினார். யோசுவா அதிகாலமே எழுந்திருந்தான். ஆசாரியர்கள் கர்த்தரின் பெட்டியை சுமந்து கொண்டு போனார்கள் (யோசு 6:11,12) ஏழாம் நாள் அதிகாலமே எழுந்திருந்து பட்டணத்தை ஏழுதரம் சுற்றி வந்தார்கள். எக்காளங்களை ஊதுகையில் ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள். அடைபட்டிருந்த அலங்கம் இடிந்து விழுந்தது (யோசு6:20) அதிகாலையில் ஆயத்தமாகி கர்த்தருடைய சமுகத்தில் வந்து நிற்க நீங்கள் தீர்மானித்து செயல்படுவீர்களானால் உங்கள் உலக வாழ்விலும் ஆவிக்குரிய வாழ்விலும் நீங்கள் முன்னேறுவதற்கு தடையாய் நிற்கிற காரியங்கள் யாவும் தகர்ந்து போகும். தூக்கம், சோர்வு, அசதி ஆகிய தடைகளை மேற்கொள்ளுங்கள்.

முன்னேறி செல்கிற மேன்மையை சுதந்தரித்து கொள்வீர்கள். அதிகாலையில் எழுந்து கர்த்தரின் உடன்படிக்கையை நினைவு கூறும் படியும் கைக்கொள்ளும் படியும் வேதத்தை தியானம் செய்ய தீர்மானியுங்கள். தாவீது ராஜா சவுல் ராஜாவிற்கு தப்பியோடி கெபியில் ஒதுங்கும் நேரத்திலும் சொல்லுகிறார். என் மகிமையே விழி, வீணையே, சுரமண்டலமே விழியுங்கள், அதிகாலையில் விழித்துகொள்வேன் (சங்57:8) அதிகாலையில் நான் எழுந்து சத்தமிட்டேன் உம்முடைய வசனத்திற்கு காத்திருக்கிறேன். உமது வசனத்தின் படி தியானிக்கும் படி குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துகொள்ளும். (சங்119:147,148) அதிகாலையில் சகாயம் பண்ணுகிற தேவன் (சங் 46:5) அதிகாலையில் கிருபையை கேட்கப்பண்ணுகிற தேவன் (சங்143:8) உங்களோடு வேதவசனங்கள் மூலமாய் பேசுவார். போதிப்பார் நடக்கவேண்டிய வழியை காட்டுவார். ஆலோசனை சொல்லுவார் (சங்32:8) அதிகாலையில் நீங்கள் தேவசமுகத்திற்கு வரும்பொழுது.

இயேசு அதிகாலையில் இருட்டோடே எழுந்து புறப்பட்டு வனாந்தரமான ஒரிடத்திற்கு போய் அங்கே ஜெபம் பண்ணினார் (மாற்1:35) இயேசு கிறிஸ்துவோடு நீங்கள் ஐக்கியம் கொள்ளுவதற்கும் அவருடைய வல்லமையை பெற்றுகொள்வதற்கும் அவரையே முன் மாதிரியாய் வைத்து செயல்படுங்கள் வாழ்க்கையில் முதன்மையானவைகளையெல்லாம் தேவனுக்கே கொடுங்கள், ஒவ்வொருநாளும் முதன்மையான நேரத்தை தேவனுடைய சமுகத்தில் செலவிடுங்கள்.

யேகோவாயீராய் எல்லாம் பார்த்துக்கொள்வார். முன்னேற்றத்திற்கு எதிரே அடைக்கப்பட்டிருக்கிற தடைகளையெல்லாம் தகர்த்து போடுவார். தேவ வல்லமையினால் நிரப்பி உங்களை பயன்படுத்துவார். ஜெபத்தோடு தீர்மானம் செய்வீர்களா? தேவன் உங்கள் தீர்மானத்தை கனப்படுத்துவார்.

**எனது தீர்மானம்:** மோசேயைப்போல, கர்த்தருடைய சமூகத்திற்குச் செல்ல அதிகாலமே எழுந்து ஆயத்தமாகி அவர் சமூகத்தில் நிற்க தீர்மானிக்கிறேன்.



# Valentine Day

சகோ. B. பொற்செல்வன் ஆசீர்

வேலன்டைன் என்பவர் ரோம் நகரிலிருந்து 96 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள Interamna என்று அழைக்கப்பட்டதும் தற்போது Terni என்று அழைக்கப்படுவதுமானப் பட்டணத்தில் வாழ்ந்தவர். இவர் வாழ்ந்தக் காலத்தில் ரோம பேரரசை Cladius ll அல்லது Cladius Gothicus என்று அழைக்கப்பட்ட பேரரசர் ஆண்டு வந்தார்.

இவர் காலத்தில் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை மறுதலிக்கவும் ரோம தேவைதகளுக்கு வணக்கம் செலுத்தவும் கட்டாயப்படுத்தப்பட்டனர். இவர் போல் கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தில் பேரரசர்கள் ரோம பேரரசில் அநேகர் உண்டு அப்போஸ்தல நடபடிகள் புத்தகம் கி.பி 34 முதல் கி.பி 67 முடிய உள்ள திருச்சபை வரலாற்றை அதன் உபத்திரவங்களோடு விளக்குகிறது.

கி.பி 67 முதல் கி.பி 100 வரையுள்ள காலக்கட்டத்தில் நீரோ (Nero) பேரரசு தொடங்கி டிரோஜன் (Trojan) பேரரசர் வரை ஆண்டனர். அவர்கள் காலத்தில் தான் பவுல் பேதுரு யோவான் மற்றும் அநேக சீஷர்கள் உபத்திரவப்படுத்தப்பட்டு யோவான் தோமா (இந்தியாவில் மரித்தார்) தவிர மற்ற யாவரும் இரத்த சாட்சிகளாய் மரித்தனர்.

கி.பி.100 முதல் கி.பி. 313 வரைக்கும் உள்ள காலக் கட்டத்தில் ரோம பேரரசர்களால் திருச்சபைக் கடந்துச் சென்ற உபத்திரவம் சொல்லண்ணா துயரமாகும். இக்காலத்தில் டிரோஜன் (கி.பி 98 – கி.பி117) ஆதிரியான் (Harchan) (கி.பி.117 – 138) அன்டோனியஸ்பயஸ் (Antoninus Pious) (கி.பி.138- 161)மாற்கு அரீலியு (Marcus Autalius) (கி.பி.161- 180) கமோடோஸ் (Commodus) செப்பற்றிமு செவீரு (Septimus Severus) டியோகிளிஷன் கிளாடியஸ் ஜீலியஸ் சீஸர் போன்ற பேரரசர்கள் ஆண்டனர். இவர்கள் காலத்தில் கிறிஸ்தவர்கள் அடைந்த உபத்திரவம் பெரியது. இப்படிப்பட்ட பேரரசர்களில் ஒருவர் கிளாடியஸ் கோத்திகஸ்.

இவர் ஆட்சிகாலத்தில் வேலன்டைன் கிறிஸ்துவுக்கு உத்தம சாட்சியாய் வாழ்ந்து வந்தார். இவரோடு மேரினோ என்பவரும் இணைந்து உபத்திரவப்படுத்தப்படும், கிறிஸ்தவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தனர். மேலும் பேரரசர் Claudius ll தனது போர்ச்சேவர்கள் திருமணம் செய்யாது இருந்தால் தான் தீவிரமாக போரிடுவர் என்றும் போர்வீரர் எண்ணிக்கை குறையாது இருக்க அவர்கள் திருமணம் செய்யாது இருக்கவேண்டும். ஆனால் வேண்டுமானால் திருமணம் செய்யாது ஒரு பெண்ணோடு வாழலாம் என சுயநல நோக்கோடு சட்டமிட்டார். இதனை வேலண்டைன் எதிர்த்து முறையாக திருமணம் செய்து தான் வாழ வேண்டும் என சில போர்ச்சேவகர்களுக்கு அவர் திருமணம் செய்து வைத்தார்.

இதனை அறிந்த பேரரசர் வேலன்டைனை கைது செய்து சிறையில் அடைத்தார். சிறையில் சிறை அதிகாரி (Jailor) வளர்ப்பு மகள் வாய் பேசாது.

கண் தெரியாது இருந்தவள் இவர் ஜெபத்தால் சுகமானாள். சிறையில் 46 நபர்களை கிறிஸ்துவுக்குள் நடத்தி ஞானஸ்நானம் கொடுத்தார். அவர்களில் சிறை அதிகாரி குடும்பமும் மனந்திரும்பியது.

இதை அறிந்த பேரரசர் வேலன்டைனை கிறிஸ்துவை மறுதலிக்கவும் ரோம தேவதைகளை வணங்கவும், தூபங்காட்டவும் கட்டளையிட்டார். வேலன்டைன் அதை மறுத்ததும் அல்லாமல் பேரரசருக்கு கிறிஸ்துவைப் பற்றி கூறி அவரை மனந்திருப்ப முயன்றார். அதனால் கோபங்கொண்ட பேரரசர் கி.பி. 270 இல் இவரை கல்லெறிந்தும் தடியால் அடித்தும் கொல்ல கட்டளையிட்டார். அதில் இவரது உயிர் பிரியாததால் பேரரசர் வேலன்டைனை சிரச்சேதம் பண்ண கட்டளையிட்டார். வேலன்டைன் சிரச்சேதம் பண்ணப்பட்ட நாள் பிப்ரவரி 14 ஆகும். வேலன்டைன் கிறிஸ்துவின் சாட்சியின் நிமித்தமும், பரிசுத்தமான திருமண உறவுதான் சரி என்றும். உறுதியான விசுவாசத்தின் நிமித்தமும் இரத்தசாட்சியாய் கி.பி.270 பிப்ரவரி 14இல் மரித்தார்.

பிப்ரவரி 14, வேலன்டைன் கிறிஸ்துவின் அன்பிற்காய் அவருடைய பரிசுத்த கட்டளைகளுக்காய் உயிர்விட்ட இரத்தசாட்சியாய் மரித்த நாளே ஆகும். மற்றபடி இந்த நாளுக்கும் காதலர்களுக்கும் எந்த சம்பந்தமே இல்லை.

வேலன்டைன் கத்தோலிக்க குருவும் அல்ல, கத்தோலிக்க பேராயரும் அல்ல, ஏனெனில் ரோமன் கத்தோலிக்க திருச்சபை, நான்காம் நூற்றாண்டில் கான்ஸ்டன்டைன் பேரரசர் கி.பி.313இல் பேரரசராக பொறுப்பேற்ற பின்னர் தான் நிறுவப்பட்டது. வேலன்டைன் மரித்த ஆண்டு அதற்கு முன்னர் கி.பி. 270இல் அதாவது 3வது நூற்றாண்டில் என்பதை மறவாதிருங்கள்.

### கிறிஸ்தவர்கள் இந்நாளை எப்படி கொண்டாடலாம்.

1. இரத்தச்சாட்சியான வேலன்டைன் தன் வாழ்வை கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்து, மரணமே அதின் நிமித்தம் நேரிட்ட போதும் விசுவாசத்தில் நிலைத்து நின்றார்.
2. கிறிஸ்துவை அறிவித்ததின் நிமித்தம் உபத்திரவம் வந்தபோதும் கிறிஸ்துவை அறிவித்து சிறையில் இருந்த போதும் மற்றவர்களுக்கு சுவிசேஷம் அறிவித்து 46 பேர்களை ஞானஸ்நானம் வரை வழிநடத்தினார்.
3. திருமண வாழ்வின் பரிசுத்தம் என்பது மணஉறவு திருமணத்திற்கு பின்பே என்பதில் தானும் உறுதியாய் இருந்து அரச சட்டத்தை மீறி மற்றவர்களையும் இந்த பரிசுத்த வாழ்விற்கு கொண்டு வருவதில் பேரரசரின் கோபத்திற்கு உள்ளானாலும் மாறாது இருந்தார்.

இந்த மூன்றும் நமக்கு கொண்டாடப்பட வேண்டிய விதத்தை விளக்குகிறது.

**முதலாவது:** உங்கள் வாழ்வை அவரைப்போல் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்து வாழ்வதன் மூலம் கொண்டாடுங்கள்.

**இரண்டாவது :** கிறிஸ்துவின் அன்பை எந்த சூழ்நிலையிலும் எந்த பாடுகள், கேலிகள், பரிகாசங்கள் நடுவிலும் அறிவிக்க தயங்காது அறிவித்து கொண்டாடுங்கள்.

**மூன்றாவது:** பாலுறவு என்பது கொச்சைப்படுத்தப்பட்ட இந்த நாட்களில் திருமணத்திற்கு பின்பே என்பதில் உறுதியாய் இப்புத்தகத்தின் முதல் அத்தியாய



வாலிபர்களைப் போல நீங்கள் உங்களை அர்ப்பணித்து மற்றவர்களையும் இந்தப் பரிசுத்த வாழ்விற்கு அறைகூவல் விடுவதன் மூலம் கொண்டாடுங்கள்.

திருச்சபை இதை மறந்ததால் பின் நாட்களில் வந்த கற்பனை கதையாளர்களின் கதைகள் மக்களால் பின்பற்றப்பட்டு தவறான திசைக்கு திருப்பப்பட்டு விட்டது. இதற்கு முதற்காரணம் Geoffrey Chucer என்பவர் 14ம் நூற்றாண்டில் எழுதிய Parliament of Folues என்ற 700 வரிகள் கொண்ட கற்பனை கவிதையே. இதைத் தொடர்ந்து பல புனைவுகள் உண்மையை மறைத்து விட்டன. போலியான சிந்தைகள் காதலர் தினமாய் மாற்றிவிட்டன. கிறிஸ்தவம் அயர்ந்து தூங்கியதன் விளைவு தூங்கிய நேரத்தில் சாத்தான் களைகளை விதைத்து விட்டான்.

கிறிஸ்துவை அறிந்த விசுவாச இளைஞனே! இதைப் புரிந்து தெளிந்து எழுந்து கிறிஸ்துவுக்காய் இரத்தசாட்சி Valentine போல் அவருக்குச் சாட்சியாக மாறிட அழைக்கிறோம். வாருங்கள்!

**14.2.2013 வேலன்டைன் - டே *Valentine Day* அன்று நடைபெற உள்ள Philio – 2013 இளைஞர் இனிய பெருவிழாவிற்காக ஜெபியுங்கள். கலந்து கொள்ள உங்கள் யாவரையும் அன்போடு அழைக்கிறோம்.**

## செய்திகள்

- பிப்ரவரி 4 உலக கேன்சர் தினமாகும். கேன்சர் சம்பந்தப்பட்ட மருத்துவதுறை (oncology) ஆன்கோலாஜி என அழைக்கப்படுகிறது.
- இரத்தசோகை என்பது இரத்த சிவப்பணு, இரும்பு சத்து தழைச்சத்து (folic acid) மற்றும் விட்டமின் குறைவினால் ஏற்படுகிறது.
- இரும்பு சத்து குறைவினால் வரும் இரத்த சோகையானது மிகவும் பொதுவாக அதிகமாக காணப்படும் ஒன்றாகும்.
- இரும்பு சத்து என்பது இரத்தத்தில் காணப்படும் ஒரு முக்கியமானதாகும்.
- இந்தியாவில் இரும்பு சத்து குறைவினால் வரும் இரத்த சோகையே பெருவாரியாக காணப்படுகிறது.
- இந்த இரத்த சோகையானது 75 சதவீதம் குழந்தைகள் பெண்களுக்கும் 45 சதவீதம் ஆண்களுக்கும் வகுக்கிறது.
- இது பெருவாரியாக கொக்கிப்புழு அமீபா காடாபுழு, குடற்புழு போன்றன குடலில் இருப்பதால் ஏற்படுகிறது.
- Central Secondary Education Board நடத்திய ஆசிரியர் தகுதித்தேர்வ 1-8 வகுப்பு நடத்த உள்ள ஆசிரியர்களுக்கு கட்டாயமானது.
- 2012 நவம்பரில் இத்தேர்வை எழுத 9.40 இலட்சம் பேர் பதிவு செய்து 7.95 இலட்சம் பேர் எழுதியதில் 4,849 பேர் மட்டுமே தேர்ச்சி பெற்றனர்.
- தமிழக ஆசிரியர் தேர்வு வாரியம் 2012 ஜுலையில் நடத்திய தேர்வில் 6.60 இலட்சம் பேர் எழுதியதில் 2,448 பேர் மட்டுமே தேர்ச்சி பெற்றனர். தேர்வு நேரம் போதவில்லை என தேர்வு நேரத்தை 1½ மணி நேரத்திலிருந்து 3 மணி நேரமாக 6.56 இலட்சம் பேர் எழுதியதில் 19.246 பேர் மட்டுமே தேர்ச்சி பெற்றனர்.

# நம் ஊழியங்களுக்கு தேவன் தந்த வாக்குத்தத்தங்கள்

துதியுங்கள் ஜெபியுங்கள்

தேவன் இவ்வூழியம் ஆரம்பிக்கப்பட்ட 1987 ஜனவரி மாதம் முதல் ஒவ்வொரு ஆண்டும் தமது வாக்குதத்தத்ததை தந்து நடத்தி வருகிறார். அதை நிறைவேற்றுவதையும் ஊழியத்திலும் ஊழியத்தோடு இணைந்து இந்த வாக்குதத்தத்தை விசுவாசித்து ஜெபிப்போர் வாழ்விலும் அதை நிறைவேற்றுவதை நாங்கள் கண்கூடாக கண்டு அனுபவித்து தேவனை துதித்து வருகிறோம்!.

இந்த தேவனின் வாக்குதத்தத்ங்களின் நிறைவேறுதல் அந்த ஆண்டோடு முடிகிற ஒன்றல்ல. அது தொடருகிற ஒன்று. எனவே கடந்த ஆண்டுகளிலும் இந்த ஆண்டிலும் தேவன் தந்த வாக்குதத்தங்களை தேவனை துதிக்க தேவனை நோக்கி ஜெபிக்க வெளியிடுகிறோம். நீங்கள் உங்களுக்காக ஊழியங்களுக்காக இந்த வாக்குதத்தங்களை கொண்டு ஜெபியுங்கள்! துதியுங்கள்!.

1. **1987** : தேவரீர் பூமியை விசாரித்து அதற்கு நீர்ப்பாய்ச்சுகிறீர். தண்ணீர் நிறைந்த தேவ நதியினால் அதை மிகவும் செழிப்பாக்குகிறீர். சங் 65:9
2. **1988** : நீ என் பார்வைக்கு அருமையான படியினால் கனம் பெற்றாய். நானும் உன்னை சிநேகித்தேன். ஆதலால் உனக்கு பதிலாக மனுஷர்களையும் உன் ஜீவனுக்கு ஈடாக ஜனங்களையும் கொடுப்பேன். ஏசா 43:4
3. **1989** : கர்த்தர் தமது மந்தையை விசாரித்து அவர்களை யுத்தத்திலே தமது சிறந்த குதிரையாக நிறுத்துவார். அவர்கள் பெருகியிருந்ததுப் போலவே பெருகிப் போவார்கள். சகரியா 10: 3,**8**
4. **1990** : "சேனையானது புறப்படும் போதும், திரும்பி வரும்போதும், என் ஆலயம் காக்கப்படும் படி அதைச் சுற்றிலும் பாளையம் போடுவேன். இனி ஒடுக்குகிறவன் அவர்களிடத்தில் கடந்து வருவதில்லை". சக. 9:8
5. **1991** : "கர்த்தரோ பயங்கரமான பராக்கிரமசாலியாய் என்னோடு இருக்கிறார்".ஏரே 20:11 ஆகையால் என்னச் சொல்லுவோம். ஏன்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலன் உண்டு". பிலி 4:11
6. **1992** : "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்". 1கொரி 15:57
7. **1993** : "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்: நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்:. 1யோ. 5:4
8. **1994** : "உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து போவேன்: என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்". சங். 18:29



9. **1995** : "உம்முடைய காருணியம் என்னைப் பெரியவனாக்கும்". சங்.18:35
10. **1996** : "யாக்கோபு வேர் பற்றி, இஸ்ரவேல் பூத்துக் காய்த்து உலகத்தைப் பலனால் நிரப்பும் நாட்கள் வரும்". ஏசாயா 27:6
11. **1997** : "அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது". சங்.118:23
12. **1998** : "என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்". யாத். 33:14
13. **1999** : "அவர்களை வர்த்திக்கப்பண்ணுவேன்; அவர்கள் குறுகிப்போவதில்லை, அவர்களை மகிமைப்படுத்துவேன்; அவர்கள் சிறுமைப்படுவதிலலை". எரே 30:19
14. **2000** : "தேவன் (அவர்) கன்மலையைத் தண்ணீர்த் தடாகமாகவும், கற்பாறையை நீரூற்றுகளாகவும் மாற்றுகிறார்". சஙு 114:8
15. **2001** : "நான் அதற்குச் சுற்றிலும் அக்கினி மதிலாயிருந்து, அதின் நடுவில் மகிமையாக இருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." சக.2:5
16. **2002** : "தேவன் எங்களை ஆசீர்வதிப்பார்; பூமியின் எல்லைகளெல்லாம் அவருக்குப் பயந்திருக்கும்". சங்.67:7
17. **2003** : "கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான்." நீதி.28:25
18. **2004** : "இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்". வெளி.3:8
19. **2005** : "மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது". மத். 5:14
20. **2006** : "இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவில் பெரியவராயிருக்கிறார்". ஏசா. 12:6
21. **2007** : "உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்". மீகா 7:15 என்று கர்த்தர் சொல்லுகிறார்". எரே31:14
22. **2008** : "என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்". எரே 31:14
23. **2009** : "ஆசீர்வாதமான மழை பெய்யும்". எசே. 34:26
24. **2010** : "இதோ, திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்". வெளி. 3:8
25. **2011** : "அவன் சத்துருக்களுக்கு வெட்கத்தை உடுத்துவேன்; அவன் மீதிலோ அவன் கீரிடம் பூக்கும்". சங். 132:18
26. **2012** : கர்த்தர் சொல்லுகிறார்: வனாந்திரத்திலே தண்ணீர்களும், கடும் வெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும். ஏசா. 35:6
27. **2013** : **"**கர்த்தராகிய நான் நீர்முலமானவைகளைக் கட்டுகிறேன் என்றும், பாழானதை பயிர்நிலமாக்குகிறேன். எசே. 36:36
28. **தேவன் நம்முடைய ஊழியத்திற்குத் தந்த தரிசனம்** வாரும் என் நேசரே! வயல்வெளியில் போய், கிராமங்களில் தங்குவோம். (உன்7:11)

# *பணித்தளங்களுக்காய் முழங்காலில் ....*

**தூத்துக்குடி மாவட்டம்**:

**பணித்தளம்: அய்யனேரி**

இங்கு ஆலயம் கட்டுவதற்கு காணப்படுகிற தடைகள் மாற.. கிராமத் தலைவர் கருப்பசாமி அவர்கள் ஆலயம் கட்ட நமக்கு அனுமதி தருமாறு ஜெபிக்கவும். செவ்வாய்கிழமை தோறும் நடக்கிற ஜெபத்தில் அநேகர் கலந்து கொள்ளவும், சிறுவர் கூடுகை நடத்த உள்ள தடைகள் மாறவும் ஜெபிப்போம்.

**புளியங்குளம்:** சகோதரி.சுப்புத்தாயின் மகன் மனேஸ்வரன் மற்றும் மகள் வனிதா ஆகிய இருவருக்கும் தேவன் குழந்தை பாக்கியம் கொடுக்கவும், இவர்கள் வீடு கட்டுவதற்கு வாங்கின கடனை அடைக்கவும் தேவன் கிருபை செய்ய ஜெபிப்போம். சகோதரி. குருவலட்சுமி இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**சங்கரபாண்டியாபுரம்**: சகோதரி. காளியம்மாவிற்கு நரம்புதளர்ச்சி வியாதிலிருந்து தேவன் விடுதலை கொடுக்க ஜெபிப்போம்.

**பணித்தளம்: ஸ்ரீ மூலக்கரை**

இங்கு ஊழியம் செய்கிற சகோ. மோசஸ், ரூபி இவர்களின் பிள்ளைகளின் படிப்பிற்காகவும், சுகபெலத்திற்காகவும் ஜெபிக்கவும், சகோ. செந்தூரான் இடுப்பிற்கு கீழ் செயல் இழந்து விட்டது நல்ல சுகம் கிடைக்க ஜெபிக்கவும்.

சகோதரி. ஜெபபாக்கியம் மகன் பவுலுக்கு வேலை கிடைக்கவும், சகோதரி. ஜெயசெல்விக்கு தேவன் ஏற்ற துணையை கொடுக்கவும் ஜெபிப்போம்.

**திருப்புளியங்குடி:** இங்கு ஜெபவீடு கட்டுவதற்கு பணத் தேவைகள் சந்திக்கப்படவும், ஆத்துமாக்கள் ஆதாயம் பண்ணப்படவும், ஆராதனைக்கு வருகிற பிள்ளைகளுக்குள் சமாதானம். காணப்படவும் ஜெபிப்போம். மந்திரவாதி கந்தம்மாள், காமராஜ், அருள்ராஜ், விஜயராஜன், சக்தி இவர்கள் மந்திரவாதத்தைவிட்டு மனந்திரும்பி இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**பணித்தளம்: தாதன்குளம்**

சகோ. கோயில்பிள்ளை இரட்சிக்கப்பட்டு தேவனுக்கு சாட்சியாக வாழ

**அரசகுளம்**: சகோதரி. பியூலா குழந்தைக்கு கழுத்துப் பகுதியில் உள்ள பெலவீனங்கள் மாறவும், குடும்பத்தில் சமாதானம் உண்டாகவும் ஜெபிப்போம். சகோதரி. நாச்சாளுக்கு கழுத்தில் உள்ள கேன்சர் கட்டி மறைய ஜெபிப்போம்.

**கருங்குளம்**: சகோதரி. ஜெயாவீட்டில் நடைபெறுகிற பெண்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளுகிற ஒவ்வொருவரும் ஆண்டவருக்குள் உண்மையாக ஜீவிக்க ஜெபிப்போம்.

**வல்லகுளம்:** சகோதரி. ஜாஸ்மினுக்கு வயிற்றில் இருக்கிற கட்டி மறைய ஜெபிப்போம்.

**பணித்தளம்: அப்பனேரி**

சபைக்கு விரோதமாக கிரியைச் செய்கிற மனிதர்களின் தீமையான செயல் மாறும்படியாகவும், ஊழிய வளர்ச்சிக்காகவும் ஜெபிப்போம்.



**புது அப்பனேரி:** குருவம்மாள் என்ற சகோதரிக்கு இடுப்பு வலியிலிருந்து தேவன் விடுதலை கொடுக்கவும், முத்தம்மாள் என்ற சகோதரி இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

**கோவில்பட்டி:** சகோதரி. சங்கரியிடம் பணத்தை வாங்கி விட்டு அவரை ஏமாற்றி விட்டு ஒடினவர்களிடம் இருந்து பணம் திரும்ப கிடைக்க ஜெபிப்போம். சகோ. செந்தூர்பாண்டியன் மனந்திரும்பி இரட்சிக்கப்படவும். காசி, மகேஸ்வரி இவர்கள் இரட்சிக்கப்படவும், மகேஸ்வரிக்கு சத்துணவில் வேலை கிடைக்கவும்

**பணித்தளம்: பேட்மாநகரம்**:

**பேரூர்:** சகோதரி. சீதா இரட்சிக்கப்படவும், பிரிந்திருக்கிற கணவன் மனைவி சேர்ந்து வாழவும் ஜெபிப்போம்.

சகோ. காசிராஜன் அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு காணப்படுகிற தடைகள் மாறவும், பணத்தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.

**நைநார்புரம்::** சகோதரி.வசந்திக்கு வேலைக்கு போன இடத்தில் கீழே விழுந்து வலதுகையில் அடிபட்டு எலும்புமுறிவு ஏற்பட்டுள்ளது. இந்த சகோதரிக்கு தேவன் பரிபூரண சுகத்தை கொடுக்க ஜெபிப்போம்.

**பணித்தளம்: ஆண்டாள்நகர்**

மிஷனெரி ரெபேக்காள் அவர்களின் அப்பாவிற்கு அவ்வப்போது பெலவீனப்படுத்துகிற கல் அடைப்பு வியாதி நீங்கவும், அவர்கள் அம்மா நல்ல சுகத்தோடு இருக்கவும் ஜெபிப்போம்.

**ராஜாராமன் நகர்:** இங்கு நடைபெறுகிற ஆராதனையில் பின்மாற்றத்தில் இருக்கிற சகோதரி எஸ்தர், பாப்பா கலந்து கொள்ளவும், இன்னும் அநேக புதிய ஆத்துமாக்கள் கலந்து கொள்ளவும் ஜெபிப்போம். முதியோர் இல்லத்தில் இருக்கும் தாயார் கிரேஸ் செல்வபாக்கியத்திற்கு இரண்டு கால்களும் வீக்கமாக உள்ளது. தேவன் அவர்களுக்கு சுகத்தை கொடுக்க ஜெபிப்போம்.

**பணித்தளம்: திருக்களூ**ர் சகோ. கனி, முத்துப்பாண்டி அவர்கள் வீடு கட்டுவதற்கு காணப்படுகிற தடைகள் மாறி தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். சகோதரி. ரெஜினா, கார்த்தி இவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**தேமான்குளம்**: இங்கு நடக்கிற சிறுவர் ஊழியத்திற்காகவும், அநேக ஜனங்கள் இரட்சிக்கப்பட்டு ஆராதனைக்கு வர ஜெபிப்போம்.

**தவசிநகர்**: இந்த கிராமத்தில் உள்ள அனேக விக்கிரக கட்டுகள் அவிழ்க்கப்படவும், சிறுவர்கள் ஆராதனைக்கு தடையில்லாமல் வரவும் ஜெபிப்போம்.

**பணித்தளம்: தட்டப்பாறை**

சகோதரி. எஸ்தர் அவர்களுக்கு தேவன் கால்வலியிலிருந்து முற்றிலும் விடுதலை தர ஜெபிப்போம். சகோதரி. எஸ்தர் அவர்களின் மகனுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கவும் ஜெபிப்போம். சகோதரி. சந்திரா அவர்கள் எந்தவொரு தடையும் இல்லாமல் ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**சொக்கலிங்கபுரம்**, தளவாய்புரம் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம்

சொல்ல காணப்படுகிற தடைகள் மாற ஜெபிப்போம்.

**தெற்கு சிலுக்கன்பட்டி:** சகோ. ஜெயராஜ் அவர்கள் பூரணமாய் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

**பணித்தளம் : பட்டாண்டிவிளை**

கண்ணாடிவிளை என்ற கிராமத்தில் கூடிவரும் வாலிப பெண்கள் கர்த்தருக்குள் வளர, படிக்கிற பிள்ளைகளின் படிப்பு ஆசீர்வதிக்கப்பட, ஜெனித்தா என்ற தங்கை இழந்து போன இரட்சிப்பை பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

**Arts College Hostel:** இங்கு தங்கி படிக்கிற பிள்ளைகளின் வாழ்க்கை ஆசீர்வதிக்கப்பட, இரட்சிக்கப்படாத பிள்ளைகளை கர்த்தர் இரட்சிக்க ஜெபிப்போம்.

**Engg College Hostel:** இங்கு புதிதாக வந்திருக்கிற பிள்ளைகளை கர்த்தர் இரட்சிக்க ஜெபிப்போம்.

**செபத்தையாபுரம்:** டேனி, புஸ்பா இவர்களின் படிப்பு ஆசீர்வதிக்கப்பட,மகாராஜன் என்பவருக்கு காலில் காணப்படுகிற பெலவீனம் மாற ஜெபிப்போம்.

**சக்கம்மாள்புரம்**: சகோதரி. ரூபியின் அண்ணன் இரட்சிக்கப்படவும், சகோதரி. சோபியாவுக்கு ஏற்ற துணை கிடைக்கவும் ஜெபிப்போம்.

**பணித்தளம்: தாளமுத்துநகர்**

சகோதரி சோபியாவிற்கு விபத்தினால் பாதிக்கப்பட்டுள்ள கால்பகுதியில் சுகம் உண்டாக, சகோதரி. பேபியின் குடும்பத்தில் காணப்படுகிற கசப்புதன்மைகள் மாறி குடும்பத்தில் சமாதானம் உண்டாக, சகோ.கனகராஜ் செய்யும் அப்பளம் தொழில் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

### திருநெல்வேலி மாவட்டம்

**பணித்தளம்: அத்தியூத்து**

சகோ. சின்ன பண்டாரம் அவர்களுக்கு நரம்புதளர்ச்சி குணமாகவும், சகோதரி, சுப்பு வீடு சீக்கிரமாக விற்கவும், சின்னபிள்ளை, செல்வம் இரட்சிக்கப்படவும், சகோ.ஜேம்ஸ்க்கு வரவேண்டிய பணம் கிடைக்கவும்...

**சீதற்பநல்லூர்:** சகோ.ஆறுமுகத்திற்கு அனுதினமும் கூலி வேலை கிடைக்கவும், கடன் பாரம் மாறவும் ஜெபிப்போம். சகோ. ராசுகுட்டிக்கு தேவையான பணத் தேவைகள் சந்திக்கப்படவும், குட்டியம்மாபாட்டிக்கு காணப்படுகிற ஆஸ்துமா நோய் குணமாகவும் ஜெபிப்போம்.

**சிறுக்கன்குறிச்சி:** சகோதரி. பியூலாவிற்கு இருக்கும் கடன்பிரச்சனைள் மாறவும், சாமுவேல்ராஜ், இசக்கிமுத்து இரட்சிக்கப்படவும், சகோதரி. அந்தோணி நன்றாகப் பேசவும், சகோதரி. இச்சகியம்மாவிற்கு காணப்படுகிற அசுத்த ஆவி போராட்டத்திலிருந்து விடுதலை கிடைக்கவும் ஜெபிப்போம்.

**சோலைச்சேரி:** சகோ. அருளுக்கு டீச்சர் வேலை கிடைக்க ஜெபிப்போம்.

**ஆலங்குளம்:** இங்கு நடைபெறுகிற அற்புதத்தின் மாலை நிகழ்ச்சிக்கு அனேகர் கலந்து ஆசிர்வதிக்கப்பட ஜெபிப்போம்.



**மைப்பாறை** : சகோ. வெங்கடேஷ் திருமணம் நடைபெற ஜெபிப்போம். ராசு என்பவருக்கு கால் காணப்படுகிற பெலவீனம் மாற, இங்கு ஊழியம் செய்யும் சகோதரி.எமீமாள் அவர்களுக்கு சரீர பெலவீனம் நீங்க ஜெபிப்போம்.

**திருவேங்கடம்** : செல்லம்பட்டி –சகோதரி. மாரியம்மாள் வீடு கட்டப்பட, தேவைகள் சந்திக்க ஜெபிப்போம்.

**வெள்ளாகுளம்** - சகோதரி.சுப்புலட்சுமி அவர்கள் எழுந்து நடக்க, கபில் 12ம் வகுப்பில் நல்ல மதிப்பெண் எடுக்க ஜெபிப்போம்.

**தலைவன்பட்டி** – சகோ. பெரியசாமி கடன் பிரச்சனை மாற, சந்திரப்பட்டி – தேவப்பிச்சைக்கு கண்பார்வை கிடைக்க ஜெபிப்போம்.

**திருவேங்கடம்** - திருச்சபையில் நடைபெறுகிற அற்புதத்தின் மாலை ஜெபத்திற்கு அநேகர் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**அழகப்பபுரம் :** கிருபையின் ஆலயத்திற்கு மைக்செட் கிடைக்கவும், அதற்கு பணத்தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். மிஷனெரி சகோ. தனபாலன் தாயாரின் பெலவீனம் மாற ஜெபிப்போம்.

**அருளானந்தபுரம்** -சகோ. மைக்கேல் ஜாண்சன் வைத்திருக்கும் கோழி பண்ணை விருத்தியடைய விவசாயத்தில் நல்ல பலன் கிடைக்க ஜெபிப்போம்.

**பணித்தளம் : மேலச்செவல்**

சகோ. மணி என்ற வாலிபர் மணல் லாரி டிரைவர், இரவில் மணல் கடத்திய போது கைதுசெய்யப்பட்டார். அவர் மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

**பணித்தளம் : பெருமாள்புரம்**

சகோ. பாண்டியன் அவருக்கு இடுப்பில் காணப்படுகிற பெலவீனம் மாற ஜெபிப்போம். சகோதரி . சாராளின் தகப்பனார் கை கால் செயலிழந்து காணப்படுகிறது, பூரண சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**N.G.O. காலனி** – சகோ. ஐசக் என்பவருக்கு ஒரு கால் முட்டுக்குக்கீழ் எடுக்கப்பட்டுள்ளது. அவருடைய சரீரத்தில் காணப்படுகிற பெலவீனம் மாற ஜெபிப்போம்.

### மதுரை மாவட்டம்

**பணித்தளம் : திரளி**

சகோ. குமார் செல்வம் தம்பதியருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம். ஞானசுந்தரி, அமிர்தவள்ளி, சாந்தி, ஜயம்மாள், முத்து, ஜீவா, பாண்டியம்மாள், இவர்கள் ஞானஸ்நானம் எடுக்க ஜெபிப்போம்.

**அச்சம்பட்டி** – பள்ளியில் வேலைபார்க்கும் விஜயலட்சுமிக்கு நல்ல மணமகன் கிடைக்க ஜெபிப்போம்.

**கிழவனேரி** – அமிர்தவள்ளி சகோதரியின் கணவனுக்கு நிரந்தர வேலை கிடைக்க குடும்பமாய் ஆராதனையில் கலந்துகொள்ள, ஆலயத்தில் வேலைப் பார்த்த ஒவ்வொரும் இரட்சிக்கப்பட, ஆலயத்திலுள்ள தேவைகள் சந்திக்கப்பட ஆலயத்தில் சுவர் பூசவும் அதன் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

## விருதுநகர் மாவட்டம்

**பணித்தளம் : சாத்தூர்**

கன்னியம்மாள் என்ற சகோதரிக்கு நல்ல வேலை கிடைக்க ஜெபிப்போம். இயேசுவோடு இனிய வாலிபர் மாலை மாதந்தோறும் தடையில்லாமல் நடைபெற, பெருமாள் என்ற சகோதரனின் பெற்றோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஸ்ரீரெங்கபுரம்** : ஆர்த்தி என்ற சகோதரி தன் கணவரோடு இணைந்து வாழ ஜெபிப்போம்.

**ஆலம்பட்டி :** பவித்ராவின் குடும்பம் இரட்சிக்கப்பட, ராணி என்ற சகோதரி ஆராதனைக்கு தொடர்ந்து வர ஜெபிப்போம். அணைக்கரைபட்டி : ஆராதனை நடத்துவதற்கு கர்த்தர் கிருபை செய்ய ஜெபிப்போம்.

**புல்லக்கவுண்டன்பட்டி** : திரு.ராமமூர்த்தி என்ற ஆசிரியர் ஆலயத்திற்கு வரும் மாணவர்களை மிகவும் கடினமான வார்த்தைகளை சொல்லி கஷ்டபடுத்துகிறார். ஆசிரியர் இயேசுவை அறிய ஜெபியுங்கள். திரு. மாரிச்சாமிக்கும் அருள்ராஜ்க்கும் முதுகுத்தண்டில் காணப்படுகிற பலவீனம் நீங்கி சுகம் பெற ஜெபிப்போம். வாலிபர் முகாம் நடைபெற தேவைகள் சந்திக்கப்பட, சபைக்கு வருகிற குடும்பங்களில் இருக்கிற இடையூறுகளை மாற்ற ஜெபிப்போம். லிங்கம்மாள் காளீஸ்வரபாண்டி இவர்கள் குடும்பங்களில் பிரிவினை நீங்கி சமாதானம் பெற ஜெபிப்போம்.

**பணித்தளம் : முத்துசாமிபுரம்**

பியூலா கணவருக்கு வேலை கிடைக்கவும் பிள்ளைகள் நன்றாய் படிக்கவும் இவர்கள் அதிகமாய் தேவனுக்குள் வளரவும் ஜெபிப்போம்.

**வல்லராமபுரம்** : சாராள் என்ற சகோதரி ஆலயத்திற்கு வர முடியாமல் தடையாக உள்ளது. தேவன் தடைகளை மாற்ற ஜெபிப்போம்.

**முத்துச்சாமிபுரம்** : மேரி என்ற சகோதரி கணவர் இரட்சிக்கப்படவும், விவசாயம் செழிப்பாய் நடைபெறவம் ஜெபிப்போம்.

**சங்கரன் கோவில்** : மரியச்செல்வம் என்ற சகோதரனின் குடும்பத்தில் கஷ்டம் மாறவும், இவர்களுடைய நிலம் வேறொருவர்கையில் இருக்கிறது, தேவன் அதை திருப்பி தரவும் ஜெபிப்போம்.

**சமத்துவபுரம் -** தர்மராஜ் மனந்திரும்பவும், போவாஸ் என்ற சகோதரனின் நண்பர்கள் பணத்தை ஏமாற்றி பணமோசடி செய்து விட்டார்கள், கொடுத்த பணத்தை திரும்ப கிடைக்க ஜெபிப்போம்.

**பணித்தளம் : ஜமீன் சல்வார்பட்டி**

ஆலயத்தில் குடிநீர் பிரச்சனை மாறவும், தேவைகள் சந்திக்கப்படவும், ஜெபிப்போம். சாமுவேல் கலைசெல்வன் அய்யனார் மனந்திரும்ப ஜெபிப்போம். சித்ராவிற்கு குழந்தைப் பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம. ஈஸ்வரன் என்ற சகோதரன் தொடர்ந்து சபைக்கு வர ஜெபிப்போம்.



**பணித்தளம் : சிவகாசி**

கோபால் நகர் சகோதரி நந்தினிக்கு கர்ப்பப்பையில் பிரச்சனை மாற

**இராஜபாளையம்** - சகோதரி. ஜோதிபாலையா சரீரத்தில் காணப்படுகிற பெலவீனம் மாறவும், பிரவீனுக்கு ஏற்ற துணை கிடைக்கவும், குடும்பத்தில் போராட்டம் மாறவும் ஜெபிப்போம்.

**ஈஞ்சார்** - பவுல் ஆண்டனி பாரா மெடிக்கல் காலேஜில் மாணவியர் ஜெபக்குழு தொடர்ந்து நடைபெற ஜெபிப்போம்.

**கன்னித்தேவன்பட்டி** – ஆலய வேலைகள் தொடர்ந்து நடைபெற ஜெபிப்போம். **முத்துச்சாமிபுரம்** - ஆலயத்திற்கு இடம் கிடைக்க ஜெபிப்பபோம். திரு.பாலசுப்பிரமணியன் வெளிநாடு செல்ல தடையாக இருக்கிறது, தேவன் தடைகளை மாற்றி அற்புதம் செய்ய ஜெபிப்பபோம்.

**பணித்தளம் : பண்டுதன்பட்டி**

லிகோரிக்கு கிட்னியிலிருக்கிற பிரச்சனை மாறவும், பிரவீன் குமார் என்ற சகோதரனின் சரீரத்தில் காணப்படுகிற பெலவீனம் மாறவும் ஜெபிப்போம்.

**வெள்ளைகுளம்** - எஸ்தர் என்ற சகோதரி ஆலயத்திற்கு தவறாமல் வரவும், பெற்றோர்கள் மூலம் வருகிற எதிர்ப்புகள் மாறவும் ஜெபிப்போம்.

**கோப்பையநாயக்கர்பட்டி** – மல்லிகா என்ற சகோதரிக்கு சீறுநீரக புற்றுநோயிலிருந்து சுகம் கிடைக்க ஜெபிப்போம். **மாலையூரணிப்பட்டி** – மாரிமுத்து என்ற சகோதரன் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**பணித்தளம் : முத்தாண்டியாபுரம்**

பவுன் முத்துமாரி என்ற சகோதரிக்கு 18 வருடம் ஆகியும் குழந்தையில்லை, குழந்தை பாக்கியம் கிடைக்கவும், ஞானஸ்நானம் பெறவும் ஜெபிப்போம். ஸ்டீபன் இரட்சிக்கப்பட ஜெபிப்போம். சாமுவேல் என்ற சகோதருக்கு திருமணம் நடைபெற ஜெபிப்போம். வனிதா என்ற சகோதரிக்கு வாய் பேசமுடியாமல் காணப்படுகிறது, தேவன் அற்புதம் செய்யவும் ஜெபிப்போம். பிரபா என்ற சகோதரின் கணவர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம். ரவிக்குமார் என்ற சகோதரனுக்கு தேவன் கடன் பிரச்சனையை மாற்ற ஜெபிப்போம்.

**பணித்தளம் : ஏழாயிரம்பண்ணை**

தேவனுடைய கூடாரத்தில் திறப்பின் வாயில் ஜெபத்தில் பல நூறு மக்கள் கலந்துகொண்டு ஜெபிக்கவும், இயேசுவோடு இனிய வாலிபர் மாலையில் ஏராளமான வாலிப சகோதரிகள் கலந்துகொள்ள ஜெபிப்போம்.

**சிவசங்குபட்டி** – காளீஸ்வரி என்ற சகோதரி இரட்சிக்கப்பட்டு, பின்வாங்கி போய் பிசாசின் பிடியில் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் மீண்டும் இயேசுவை ஏற்றுக்கொள்ளவும், பிசாசியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம். அன்னாள் என்ற சகோதரிக்கு விதவை பென்ஷன் கிடைக்கவும், மகளுக்கு புத்திசுயாதீனம் இல்லமால் கஷ்டப்படுகிறார்கள், தேவன் பரிபூரணமான சுகம் கொடுக்க

## திண்டுக்கல் மாவட்டம்

**பணித்தளம் : விராலிப்பட்டி**

26 பேர் ஞானஸ்நானம் பெற்று உலகப்பிரகாரமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், இவர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

ஆலயத்திற்கு முன்பதாக தகாத வார்த்தைகளை பேசுதல், மது அருந்தும் பழக்கம் அதிகமாக காணப்படுகிறது, இவர்கள் மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம். இங்கு சிறுவர் பள்ளி நடைபெற அநேக பெற்றோர்கள் தடைகளாக உள்ளனர், பெற்றோர்கள் மனந்திரும்பி, இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**மீனாட்சிபுரம்** : பாண்டி என்ற சகோதர் இல்லத்தில் ஜெபம் நடைபெற தடையாக உள்ளது. தேவன் தடைகளை மாற்றவும், ஜெபிக்கிற மக்களை தேவன் எழுப்பி தரவும், தேவனை ஆராதிக்க நல்ல ஒரு இடம் கிடைக்கவும் ஜெபிப்போம்.

**பணித்தளம் : தொட்டம்பட்டி**

பூமிநாதன் என்ற சகோதரன் இரட்சிக்கப்படவும், அவர் சரீரத்தில் காணப்படுகிற நெஞ்சுவலி முழாங்கால் வலி மாறவும் ஜெபிப்போம். சின்னதம்பி என்ற சகோதரனுக்கு மூலவியாதிலிருந்து சுகம் கிடைக்கவும் ஜெபிப்போம்.

**செல்வநகர் :** வெள்ளையம்மாள் என்ற சகோதரின் கணவர் மனந்திரும்பி, கணவருடன் இணைந்து வாழவும், காணாமல் போன மகன் கணேஷ் திரும்பி வரவும் ஜெபிப்போம். முனியம்மாள் என்ற சகோதரிக்கு இனைப்பு வியாதியிலிருந்து சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**கோட்டூர்** : பன்னீர் செல்வம் என்ற சகோதரனுக்கு சரீரத்தில் காணப்படுகிற பெலவீனம் மாற ஜெபிப்போம்.

**கோடங்கிநாயக்கன்பட்டி :** ஜான்சி, காமாட்சி என்ற 2 சிறுமிகளுக்கு தேவன் நல்ல கண் பார்வை தரவும் ஜெபிப்போம். நோட்டக்காரன்பட்டி – செல்வி என்ற சகோதரி பின்மாற்றத்திலிருந்து மீண்டும் இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம். தொப்பம்பட்டி (தெற்கு) – போதுமணி என்ற சகோதரிக்கு அம்மை வியாதியிலிருந்து சுகம் கிடைக்க, செந்தில்குமார் என்ற சகோதரன் மனந்திரும்பவும், மனைவியுடன் இணைந்து வாழவும் ஜெபிப்போம்.

**திருப்பூர் மாவட்டம்**

**பணித்தளம் : தொட்டிபாளையம்**

பத்மா என்ற சகோதரின் கணவர் ஆராதனைக்கு போகக் கூடாது என்று தடைசெய்கிறார் தேவன் தடைகளை மாற்றவும், பத்மாவின் கணவர் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம். ஆலயம் கட்டப்படவும், தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபிப்போம். சேகர் என்ற சகோதரனுக்கு வயிற்றுவலியிலிருந்து பரிபூரண சுகம் கிடைக்கவும் ஜெபிப்போம்.

**சின்னகாட்டூர்** - ஆனந்தராஜ் என்ற சகோதரனுக்கு தேவன் மூலவியாதிலிருந்து சுகம் கொடுக்க ஜெபிப்போம்.

**அரியலூர் மாவட்டம்**

**பணித்தளம் : வெத்தியார் வெட்டு**

ஆலயம் பூசப்படவும், சுற்றுசுவர் அமைக்கவும், வயரிங் வேலை நடைபெறவும், ஜெபிப்போம். வாலிபர் கூட்டம் நடத்த தீர்மானித்துள்ளோம், தேவன் தடைகளை மாற்ற ஜெபிப்போம். இளையபெருமாள் நல்லூர் - வைத்தியநாதன் என்ற சகோதரனுக்கு தேவன் மனநிலை பாதிப்புகளிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம். வெங்கேடஷ் என்ற சகோதரன் மனந்திரும்ப...

4ம் பக்கம் பார்க்க



# "எவ்வழி நல்வழி"

Dr. P. செல்வராஜ்

மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள். (நீதி14:12)

கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன். (எரே 10:23)

ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள். (யாக் 1:21)

பத்துக் கட்டளைகளை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். முதல் நான்கு கட்டளைகள் தேவன்மீது நமக்கு இருக்கவேண்டிய மதிப்பச்சத்தைப் பற்றியவை. எஞ்சியுள்ள கட்டளைகள் பிறர்மீது நமக்கு இருக்கவேண்டிய கரிசனையைப் பற்றியவை. சுயநலத்தினால் மனித உறவுகள் பாதிக்கப்படுகின்றன. நாம், நமக்கு எது சரி, எது தவறு என்று தோன்றுகிறதோ அதன் படி வாழ்வதால், சுயநலத்தையும் நியாயப்படுத்தி விடுகிறோம். அதற்குப் பல காரணங்களையும் கூற முற்படுகிறோம். ".. இன்று நான் உனக்குக் கட்டடையிடுகிறேன். உன் கடவுளாகிய ஆண்டவர் மீது அன்பு பாராட்டு, அவரைப் பின்பற்றி அவரது வழியில் நட, அவரது கட்டளைகளையும் நியாயங்களையும் முறைமைகளையும் கடைப்பிடி. அப்போது நீ வாழ்வாய்.." என்று இணைச்சட்டம் நீ பிழைத்துப் பெருகும்படிக்கும், நீ சுதந்தரிக்கப் போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கும்படிக்கும் நீ உன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூரவும், அவர் வழிகளில் நடக்கவும், அவர் கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயங்களையும், கைக்கொள்ளவும், நான் இன்று உனக்குக் கற்பிக்கிறேன். (உபா30:16) கூறுகிறது.

1959ஆம் ஆண்டின் துவக்கத்தில் ஒரு பள்ளி மாணவன் பள்ளிமுடிந்து தன் வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்தான். நடைபாதையில் ஒரு கசங்கிய "பேப்பர் பேக்" கிடப்பதை அவன் பார்த்தான். அதை அவன் எடுத்து பார்த்தபோது அதற்குள்ளே ஒரு இருபது நூறு ரூபாய் நோட்டுக்கள் இருப்பதைக் கவனித்தான்". வீட்டிற்கு வந்து 'அம்மா' இதோ பாருங்கள்." என்று கூறிய அவனிடம் அவனுடைய தாய் 'ஜாண்' இதற்கு உரியவர் அருகில்தான் இருக்கவேண்டும். நாம் ஏன் காவல் நிலையம் மூலமாக அவரிடம்

இதை சேர்க்கக் கூடாது?" என்று கேட்டார். இந்த சிறிய நிகழ்ச்சி அந்த மாணவனின் வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

ஒரு வாகன – எரிபொருள் விற்பனையாளர் கணினியில் அதன் விலையை ரூ. 51.35/லிட்டர் என்று குறிப்பதற்குப் பதிலாக ரூ. 5.35 என்று தவறாகக் குறித்துவிட்டார். ஐம்பதுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் எரிபொருள் நிரப்பிச்சென்றுவிட்டனர். தவறைக் கண்டுபிடித்த விற்பனையாளருக்கு ஏற்கெனவே ரூ. 14000 நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. ஐம்பதுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களில் ஒரேயொரு இளையவன் மட்டும் திரும்பிவந்து முழுதொகையையும் செலுத்தினானாம். மற்றவர்களுக்கு தவறு தெரியாமலா இருந்திருக்கும் ? ஆனால் சரிசெய்வதில் அவர்களுக்கு ஆர்வம் இல்லாதுபோயிற்று! அவர்கள் இந்த வசனத்தின்படி நடந்திருக்க வேண்டுமல்லவா? : "மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். (லூக் 30:16)

இறைச்சட்டங்களின்படி வாழ்வது நமக்குக் நல்லது, பிறருக்கும் நல்லது. நல்வழியைத் தெரிந்துகொள்வது இம்மைக்கு மட்டுமல்ல மறுமைக்கும் இன்றியமையாதது. தேவனுடைய பார்வையில் எது சரி, எது தவறு என்று அறிந்துகொள்வதற்குப் பதிலாக நம்முடைய கணிப்பில் எது சரி, எது தவறு என்று தீர்மானிப்பதால் இரண்டு உறவுகள் பாதிக்கப்படுகின்றன – ஒன்று தேவனோடு நமக்குள்ள உறவு இன்னொன்று பிறரோடு நமக்குள்ள உறவு. பாதிப்பு தொடர்ந்து நீடிக்கும்போது மானிட சமுதாயத்தில் சீர்குலைவுகள் ஏற்படுகின்றன. எல்லை தாண்டிய கேடுகளால் ஒரு தேசீயமே அழிந்துபோகும் நிலை உருவாகிறது. ரோம சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களை வரலாறு நமக்குக் காட்டுகிறது. இன்றைய வல்லரசுகளும் அந்நிலைக்கருகிலிருக்கும் அரசுகளும் ஒரு ஆபத்தை எதிர்நோக்கியிருக்கின்றன என்று சொன்னால் அது மிகையாகாது.

தேவன் நாம் அவருடைய வார்த்தையின்படி வாழவேண்டும் என்று விரும்புகிறார். அவருடைய வார்த்தைதான் எல்லா வகையான அறிவிற்கும் அடித்தளமாக இருக்கிறது. எது சரி, எது தவறு என்பதைக் காட்டும் கண்ணாடியாகக் கர்த்தருடைய வார்த்தை இருக்கிறது. அந்த ஞானத்தைப் பெற்றுக்கொண்டால் நமக்கு இம்மைக்குரிய ஆசீர்வாதமும் மறுமைக்குரிய ஆசீர்வாதமும் நமக்குக் கிடைக்கும். தேவன் காட்டும் வழியே நல்வழி அது நம் வழியாக இருக்கட்டும். ஆமென்! "கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும். (2தீமோத். 3:15).



**ஜெபியுங்கள்**

| | |
|---|---|
| பிப். 16, 17 | அரிய நாயகிபுரம், நெல்லை மாவட்டம் |
| பிப். 22,23,24 | தம்மநாயக்கன்பட்டி, விருதுநகர் மாவட்டம் |
| மார்ச் 15,16,17 | தூய பேட்ரிக் ஆலயம், தூத்துக்குடி மாவட்டம் |
| மார்ச். 22,23,24 | அபிஷேக நாதர் ஆலயம், சிதம்பரநகர், தூத்துக்குடி |
| மார்ச் 25, 27 | CSI ஆலயம், கால்டுவெல்காலனி, தூத்துக்குடி |
| மார்ச் 26 | CSI ஆலயம், ஏழாயரம்பண்ணை |
| மார்ச் 29, 30,31 | போத்தனூர், கோவை. |

**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**

*தேவனுடைய கூடாரத்தில்*

## திறப்பின் வாயில் ஜெபம்

**2013 பிப்ரவரி 27 கடைசி புதன் – காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

*நீங்களும் வாருங்கள்! கலந்து கொள்ளுங்கள்! இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!*

*நேரில் கலந்து கொள்ள முடியாதவர்கள் உங்கள் ஜெப விண்ணப்பங்களை எங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியில் அனுப்பலாம்.*

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை–626 201. போன் 04562–258194

## *தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்*

**நாள் : 2013 பிப்ரவரி 26 – கடைசி செவ்வாய்**
**நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**
**இடம் : காமராஜர் திருமண மண்டபம்,**
**பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.**

### *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம் | | | |
| Grace Ministries | SBIN0007629 | SBI Bazaar, Tuticorin | 10237757808 |
| Grace Ministries | TMBL0000156 | TMB Ltd., Sipcot Tuticorin | 156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம் | | | |
| Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம் | | | |
| Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.